DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
OS NO.12/2014
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW1 |
| Name | :ரவிசங்கர் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 23.10.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இவ்வழக்கின் 2 ம் வாதி ஆவேன். நான் வாதி தரப்பு முதல் சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது, முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். 20.01.1991–கணேசன் அவர்களுக்கு நல்லச்சாமி பவர் ஏஜெண்ட் நிலையில் எழுதிக் கொடுத்த பதிவுக் கிரைய ஆவணம் **வா.சா.ஆ.1** ஆகும். 02.09.2009 – தனலட்சுமி –1, திருப்பதிராஜ் – 2 ஆகியோர்கள் S.மாரியப்பனுக்கு எழுதிக் கொடுத்த ஜெனரல் பவர் ஆவணம் **வா.சா.ஆ.2** ஆகும். 09.11.2009 வாதிக்கு மாரியப்பன் பவர் ஏஜெண்ட் நிலையில் எழுதிக் கொடுத்த பதிவுக் கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.3** ஆகும். எனவே மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் என் தந்தை வாங்கிய இடத்தை 1ம் பிரதிவாதி உழுதுவிட்டார் அதனால் இந்த வழக்கு தாக்கல் செய்தேன். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு என் தந்தை தான் விபரம் சொன்னார். என் தந்தை இறந்துவிட்டார். இந்த சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கு மால்கள் சரியானது தான். நான் சர்வே எண்.526/8ல் 1 ஏக்கர் 30 செண்டு 528/1ல் 2 ஏக்கர் 65 செண்டு ஆக மொத்தம் 3 ஏக்கர் 95 செண்டு நிலத்தில் ராமசாமி நகரில் பிளாட் எண்.61ஐ என் தந்தை கிரையம் பெற்றார் என்றால் சரிதான். சொத்து விபரத்தில் கீழ்புறம் மாலாக பிளாட் எண் 60 என குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். எனது வழக்குரையில் தாவா சொத்து 2ம் பிரதிவாதியின் சொத்திற்கு மேல்புறம் உள்ளது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் பெற்ற சொத்தின் ஆவணத்தினை வா.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கிரைய ஆவணத்தின் மூலம் 4 பிளாட்டுகளை எனது தந்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தில் தாவா சொத்து 2ம் அயிட்ட சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையில் தபசில் சொத்தின் கீழ்புறத்தில் 1ம் பிரதிவாதியின் சொத்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து பிளாட் எண்.60க்கு மேல்புறம் உள்ளதாக நான்குமாலில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனவே நான் வழக்குரையில் 1ம் பிரதிவாதியின் சொத்து கீழ்புறம் உள்ளதாக சொல்லியுள்ளது தவறு என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள விபரங்கள் மட்டும் தான் தெரியும் வழக்கு பற்றிய மற்ற விபரங்கள் எனக்கு தெரியாது. எனது தந்தை கிரையம் பெற்றுள்ள பிளாட் அரசிடம் அங்கிகாரம் பெறப்படாத லேஅவுட் என்றால் சரிதான். எனது தந்தை கிரையம் பெற்ற நான்கு பிளாட்டுகளுக்கு தனியாக உட்பிரிவு செய்து தனித்தனி பட்டாக்கள் பெறப்படவில்லை.

எனது தந்தை இறந்து 3 வருடங்கள் ஆகிறது. என் தந்தை 1ம் பிரதிவாதி பிளாட்டினை 2013 செப்டம்பர் மாதத்தில் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளதை பொறுத்து காவல் நிலையத்தில் புகார் ஏதும் அளிக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 1ம் பிரதிவாதிக்கு சொத்தை ஒப்படைக்க வேண்டும் என்பதாக கூறி வழக்கறிஞர் அறிவிப்பு ஏதும் அனுப்பவில்லை. தாவா சொத்தில் 1ம் பிரதிவாதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை என்றாலும் வழக்கிற்காக 1ம் பிரதிவாதி ஆக்கிரமித்து உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து பார்வையிட்டு அளந்து அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என மனு தாக்கல் செய்து ஆணையர் அறிக்கை மற்றும் புலப்படம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது கிழக்கே 1ம் பிரதிவாதியின் இடத்தில் இருந்து தான் அளந்து வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது சர்வே எண்.526/8 மற்றும் 528/1 ல் உள்ள 3 ஏக்கர் 95 செண்ட் நிலம் முழுவதும் ஒரே காலியிடமாக தான் இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட போது பிளாட்டுகளை காட்டக் கூடிய எல்லை கற்கள் இல்லாமல் இருந்தது என்று சொன்னால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் வழக்கு சொத்துக்கள் மனை சொத்துக்களாக பிரிக்கப்பட்டதற்கு வருவாய் துறை ஆவணங்களில் பதிவுகள் இல்லை என்றும் அதனால் வழக்கு சொத்தினை மனுவில் கண்ட விபரப்படி அளந்து காண்பிக்க இயலவில்லை என அளவையர் தெரிவித்ததாக ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ஆணையர் சொத்தை பார்வையிட்ட போது வழக்கு சொத்தை காட்டக்கூடிய வரைபடம் ஏதும் ஆணையரிடம் எனது தந்தை காண்பித்தாரா என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்தை காட்டக்கூடிய வரைபடம் என்னிடம் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை.

தாவா இடத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிடம் போது அடையாளம் கண்டு அளந்து காட்ட இயலவில்லை என்று தான் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மீண்டும் மாவட்ட அளவையர் மூலம் சொத்தை அளக்க வேண்டும் என ஆணையர் மறு நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பின் நான் உயர்நீதிமன்ற கிளையில் சீராய்வு மனு எண்.1702/2022 என்ற மனுவை தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவும் மதுரை உயர்நீதிமன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது என்றாலும் சரிதான். அதன் பின்னர் தாவா சொத்தை பிரித்து தர வேண்டும் என பரிகாரத்தை திருத்தும் பொருட்டு சீர்திருத்த மனு தாக்கல் செய்தேன் என்றாலும் அந்த மனுவை பின்னர் திரும்ப பெற்றுவிட்டேன் என்றாலும் சரிதான். அதன் பின்னர் 1ம் பிரதிவாதியின் சொத்தினையும் சேர்த்து அளக்க வேண்டும் என ஆணையர் நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்து அந்த மனுவும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தந்தை வாங்கியுள்ள பிளாட்டானது கிழமேல் 30 அடி தென்வடல் மேல்தலை 67 அடி கீழ்தலை 58 அடி அளவுள்ளது என்றால் சரிதான். அதன் கீழ் புறம் உள்ள பிளாட் எண் 60ம் ஆகும் தாவா சொத்திற்கு வடபுறத்தில் அசல் வழக்கு எண்.10/2014ல் கண்ட வாதியின் சொத்து என்றால் சரிதான். எனது தந்தைக்கு பவர் ஏஜண்ட் மாரியப்பன் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி மாரியப்பனுக்கு தனலெட்சுமி மற்றும் திருப்பதி ராஜ் ஆகியோர்கள் பவர் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும் அது வா.சா.ஆ. 2 ஆவணம் என்றால் சரிதான். தனலெட்சுமியின் கணவரும் திருப்பதிராஜின் தந்தையுமான கணேசன் என்பவர் தான் பவர் ஏஜண்ட் நல்லசாமி என்பவரிடம் இருந்து தாவா சொத்தை கிரையம் பெற்றார். மேற்படி பவர் ஏஜண்ட் மாரியப்பன் மற்றும் நல்லசாமி தற்போது உயிருடன் உள்ளார்களா என்பது பற்றி எனக்கு தெரியாது. நல்லசாமிக்கு எழுதி கொடுக்கப்பட்ட பவர் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி பவர் ஏஜண்ட் நல்லசாமி தான் சொத்துக்களை பல பிளாட்டுகளாக பிரித்து விற்பனை செய்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி புல எண்.528/2 ஏயில் உள்ள 2 ஏக்கர் 22 செண்டு நிலத்தில் கீழ் கடைசியில் உள்ள 95 செண்ட் நிலத்தினை அப்பாசாமி பிள்ளை குமாரர் இராஜரத்தினம் என்பவரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி மொத்தமாக மாட்டு வியாபரம் செய்து வருகிறார் என்று சொன்னால் தெரியாது. 1ம் பிரதிவாதி அவரது சொத்தில் மாட்டு தீவனமாக சோளநாற்று பயிர் செய்து வருகிறார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி வாங்கிய சொத்திற்கு வடபுறம் ஸ்பின்னிங் மில் உள்ளது என்றால் சரிதான். அது மில் குருசாமி நாயக்கருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த மில் சர்வே எண். 528/1ல் ஒரு பகுதியாக உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது தந்தை தாவா சொத்து பிளாட்டின் முந்தைய பாத்தியஸ்தரான குருசாமி நாயக்கரின் ஆவணங்களை பார்த்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தானது ஆதியில் முப்பிடாதி செட்டியார் மனைவி மணியம்மாள் என்பவர் 27.10.1992ல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மணியம்மாளிடம் இருந்து அப்பாசாமிபிள்ளை குமாரர் இராஜரத்தினம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி இராஜரத்தினத்திடம் இருந்து 1ம் பிரதிவாதி அவருடைய சொத்தினை கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம்பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்திற்கு தனியாக உட்பிரிவு ஏற்பட்டு சர்வே எண்.528/12 என உட்பிரிவு செய்யப்பட்டு தனியாக பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி கிரையம் பெற்ற சொத்தின் மேல்புறத்தில் வேலி போட்டு அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எனது தந்தை வாங்கிய பிளாட் எண்.61 எங்கு அமைந்துள்ளது என்று தெரியாமலேயே 1ம் பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக பொய்யாக கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி எனது சொத்தை எந்த காலத்திலும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.